## முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. ஆ. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் –9–ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.112/2018–ல் இ.ம.எண். 3/2024**

திண்டுக்கல் கிழக்கு தாலுகா, திண்டுக்கல் டவுன், ஸ்பென்சர் காம்பவுண்ட், திருவள்ளுவர் சாலையில் இருக்கும் லேட் B.S. ராமசாமி அய்யர் அவர்களின் குமாரர் சுமார் 59 வயதுள்ள திரு. R. கணேசன்.

.... மனுதாரர்/வாதி

/ எ தி ர் /

1. கரூர் மாவட்டம், கரூர் 02, கிழக்கு கௌரிபுரம், கதவு எண் 09 க்கு புது கதவு எண் 15 ல் இருக்கும் பி.நடராஜன் மகன் N. சதீஸ்குமார்.
2. மேற்படி மாவட்டம், மேற்படி ஊர், இராமனுஜம் நகர், கதவு எண்.60 ல் வசிக்கும் எம்.கோவிந்தசாமி அவர்களின் மகன் 49 வயதுள்ள G.முத்துகுமார்
3. மேற்படி மாவட்டம், கரூர் தாலுகா என்.புதூர் கிராமம் என் புதூர் அஞ்சல் துவரபாளையம் கதவு எண்.2.41/1 ல் வசிக்கும் திரு.ஏ.பெரியசாமி அவர்களின் குமாரர் P. கார்த்திகேயன்
4. மேற்படி மாவட்டம், மேற்படிதாலுகா,கரூர் எல்.ஜி.பி. நகர், கிழக்கு கதவு எண்96 ல் வசிக்கும் அம்மையப்பன் அவர்களின் குமாரர் சுமார் 40 வயதுள்ள A. கார்த்திகேயன்

.... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களால் 1ம் பிரதிவாதி பெயரில் பொறுப்புக்காக ஏற்படுத்தப்பட்ட 15.11.2011 ம் தேதிய அதிகார ஆவணம் போலியான முத்திரைத் தாள்கள் வேறு நபர்கள் பெயரில் பின்தேதியிட்டு பெறப்பட்டு முன் தேதியிட்டு பயன்படுத்தியதனால் இந்தியன் ஸ்டாம்ப் ரூல்ஸ் 1925 ரூல் 6–க்கு விரோதமானதால் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 15.11.2011 ம் தேதிய அதிகார ஆவணம் சட்டப்படி செல்லாத அதிகார ஆவணம் என வாதி கூறுவது சரியா என கூடுதல் எழுவினா வனைவு செய்து வழக்கை மேல்நடத்த உத்திரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் உ.வி.மு.ச.கட்டளை 14 விதி 5 மற்றும் பிரிவு 151 ன் கீழ் முன்னிடப்பட்டுள்ள மனு.

இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் - 30.1.2024

இம்மனு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் - 2.2.2024

இம்மனு என் முன்னர் 20.11.2024 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு B. வாசுதேவன், அவர்களும், 1 ம் எதிர்மனுதார்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயகுமார், அவர்களும், 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முருகேசன் அவர்களும் ஆஜராகியும், 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 4 பிரதிவாதிகள் மனு விசாரணை அழைப்பின் போது ஆஜரின்றி தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவாணை**

1. இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவுத்தொகை இல்லை.

**2024 ம்** ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையைப் பதித்து வழங்கப்பட்டது.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2024.12.26 11:05:13 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்

I.A.No. 3/2024
In
O.S.No. 112/2018
உத்தரவாணை
நாள் 9.12.2024